முச்சந்தி முரளி



"அப்ப நாடு முழுக்க இனி உந்த வருத்தக்காரப் போராட்டம் தான் போல"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 225

திங்கட்கிழமை
8 ஜூலை 2024

ஆனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## மணமாகி 2 வருடத்தில் மரணமான இளம்பெண்

யாழ்ப்பாணம், ஜூலை 8

இரண்டு சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த, இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

11

## 17 வயதுச் சிறுமி உயிர்மாய்ப்பு

மன்னார், ஜூலை 8

மன்னார், நானாட்டான்பிரதேசசெயலகத்துக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் வசிக்கும் 17 வயதுச் சிறுமி

11

### திருமலையில் தீயுடன்

# சம்பந்தர் சங்கமம்

திருகோணமலை, ஜூலை 8

தமிழினத்தின் பெருந் தலைவரான இரா. சம்பந்தனின் திருவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் நேற்றுமாலை தீயுடன் சங்கமமானது.

11





## ஈழத்தமிழர்களுக்கு தீர்வு; மோடி துணையிருப்பார்



### சம்பந்தரின் இறுதியஞ்சலியில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை

திருகோணமலை, ஜூலை 8

தமிழ்மக்களுக்குத்தீர்வு கிடைக்கவேண்டும் என முழுவீச்சுடன் செயலாற்றிய மாமனிதர் சம்பந்தன் ஐயாவின் இறுதி அஞ்சலியில் நான் பங்கேற்றுள்ளமை அவரின் செயலுறுதியில் இந்தியா வைத்துள்ள நேசிப்பின் அடையாளமே. சம்பந்தன் ஐயாவின் நோக்கம் நிறைவேற தொடர்ந்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

11

## அரச உத்தியோகத்தர்கள் சுகவீனப் போராட்டம்

### இன்றும் நாளையும் நாடே முடங்கும்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

அரச ஊழியர்களுக்கான வேதன அதிகரிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து - வடக்கு மாகாணம் உள்ளிட்ட - நாடளாவிய ரீதியில் அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்கள் அனைத்தும் இன்றும்,

11

## மன்னாரில் விபத்து; அருட்தந்தை பலி!



11

## ஜனாதிபதித் தேர்தல் எப்போது? ஜூலை 17 க்கு பின்னர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

ஜூலை மாதம் 17 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக்

11

## ரணிலுக்கே ஆதரவு பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கான உங்கள் பயணம் தொடரும்வரை ஸ்ரீலங்கா

11

## சீனக் கடலட்டைப்பண்ணை யாழ். மாவட்டத்தில் இல்லை!

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். மாவட்டத்தின் எந்தவொரு பகுதியிலும் சீன நாட்டவர்கள் மற்றும் வெளி மாவட்டத்தவர்கள் கடலட்டைப்

11

### சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக

## இன்று கண்டனப் போராட்டம்; ஆதரவாக பூரண கடையடைப்பு

தென்மராட்சி சமூக பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 8

'சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மீள் எழுச்சிக்காக ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் இன்று திங்கட்கிழமை தென்மராட்சி பூராகவும் பூரண கடை

11



## மொட்டுடன் பயணிப்பு; ரணில் சுற்றுகிறார் பூ!

கொழும்பு, ஜூலை 8

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் நான் இணையப்போவதில்லை. எனினும், நாட்டுக்காக பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரோஹித அபேகுணவர்த்தனவின் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப்படைகளுக்கு ஊதியம் வாரியிறைக்கும் அரசாங்கம்

## மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜூலை 8

**கடந்த வருடத்தில், ஏனைய அனைத்து ஊழியர்களின் சம்பளத்துக்கு செலவிடப்பட்ட தொகையைவிட சமமான தொகை பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளின் சம்பளத்துக்காக அரசாங்கம் செலவிட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரியவந்துள்ளது.**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய துறை ஊழியர்களுக்கு கடந்த ஆண்டு 32 ஆயிரத்து 729 கோடி ரூபா சம்பளம் வழங்கப்பட்டது. ஆயுதப்படை மற்றும் பொலிஸாரின் சம்பளத்துக்காக 31 ஆயிரத்து 200 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட சம்பளம் அரச சேவையின் சம்பளத்தில், 33 வீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் பாதுகாப்பு படையினரின் சம்பளத்துக்காக செலவிடப்பட்ட தொகை 17 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் முப்படையினருக்கான சம்பளம் வழங்குவதற்காக 21 ஆயிரத்து 787 கோடி ரூபாவும், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் பிரிவினருக்கு சம்பளம் வழங்குவதற்காக 9 ஆயிரத்து 413 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் வசந்த அத்துகோரல குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அரச ஊழியர்களுக்கு ஊதிய உயர்வில்லை

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

அரச ஊழியர்களுக்கு இந்த வருடத்தில் ஊதியம் அதிகரிக்கப்படாது. அதற்குரிய வாய்ப்புகள் இல்லை என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடத்தில் அரசாங்க ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கினோம். இதனை மேலும் அதிகரிக்க வேண்டுமெனப் பலரும் கோருகின்றனர். அது முடியாத விடயம். பொருளாதாரத்தைச் சரியான முறையில் நாம் முகாமைத்துவம் செய்யவேண்டும்.

அதிபர், ஆசிரியர்களுக்கு இரண்டு தடவைகளே சம்பளம் அதிகரிக்கப்பட்டதாகவும், சம்பளத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர். இது அநீதியான கோரிக்கை. அவர்களுக்கு இரண்டு தடவைகள் சம்பளம் அதிகரிக்கப்பட்டபோதிலும் மற்றவர்களுக்கு ஒரு தடவையே அதிகரிக்கப்பட்டது. எனவே, சம்பளம் அதிகரிக்கப்படுவதாக இருந்தால் மற்றைய தரப்பினருக்கே அதிகரிக்கப்பட வேண்டும். 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ம-66)



# அதிகாரக் கதிரையை தக்கவைக்கோம்!

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றிய உடன் இலங்கை மாற்றங்களுக்கு உள்ளாகும். அதேபோன்று அதிகாரத்தில் இருப்பதல்ல எமது நோக்கம். உரிய நேரத்தில் இளைஞர்களிடம் அதிகாரத்தைக் கையளிப்போம்.

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும். அதன்பின் நாடாளுமன்றத்திலுள்ள ஊழல்கள் களையப்படும்.

சரியான நேரத்தில் எம் கையில் உள்ள அதிகாரத்தை புதிய தலைமுறை இளைஞர்களிடம் ஒப்படைத்துவிடுவோம். ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்தை விட்டு வெளியேறத் தயாராக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வாய்ச்சொல் வீரர்களால் நாட்டை மீட்க முடியாது

## மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

நாடு வீழ்ந்தபோது சவாலை ஏற்காது தப்பியோடிய தலைவர்கள், மீண்டெழுந்துவரும் நாட்டை மறுபடியும் பின்னோக்கி இழுப்பதற்கு முற்படுகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இருண்ட யுகத்திலிருந்தே தற்போது முன்னோக்கி வந்துகொண்டிருக்கின்றோம். அன்று நாடு வீழ்ச்சியடைந்தபோது அதனைப்பொறுப்பேற்க முடியாது எனக் கூறிய தரப்பு அதேபோல சவால்களுக்கு மத்தியில் தப்பியோடிய தலைவர்கள் தற்போது மீண்டும் களத்துக்கு வந்து பல்வேறு நகைச்சுவை கதைகளைக்கூறிவருகின்றனர். தாம் தோல்வியடைவோம் என்பது அவர்களுக்குத் தெரியும். எனினும், நாடு மீண்டெழ முடியாத வகையில் பின்னோக்கி இழுப்பதற்கு முற்படுகின்றனர்.

விமர்சனங்களை மட்டுமே முன்வைப்பதற்குப் பழகியுள்ள வாய்ச்சொல் தலைவர்களால் நாட்டை மீட்க முடியுமா? - என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

# நீராடச் சென்றவர் முதலைக்கு இரை

கொழும்பு, ஜூலை 8

மாணிக்ககங்கையில் நீராடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் முதலைக்கு இரையாகியுள்ளார்.

மாணிக்ககங்கையின் பாலத்துக்கு அருகாமையில் நீராடிக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. அவரது சடலம் பொலிஸார் மற்றும் வனஜீவராசி பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொருத்து வீடுகள் பாரஊர்தியில் வந்தன

கிளிநொச்சி, ஜூலை 8

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் சீன அரசாங்கத்தின் உதவியுடன் பொருத்துவீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கென 8 பாரஊர்திகளில் பொருத்து வீடுகள் கிளிநொச்சிக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொண்டுவரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 64 வீடுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-113,66)



# மருத்துவமனைக்கு வரும் யானைகள்

## அச்சத்தில் நோயாளர்கள்

வவுனியா, ஜூலை 8

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச மருத்துவமனை சுற்றுவட்டாரத்துக்குள் இரவுவேளைகளில் யானைகள் வருகின்றன. இதனால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவுவேளைகளில் மருத்துவமனைக்கு அருகில் யானைகள் வந்துசெல்கின்றன. கடந்த பல காலமாகவே யானைகளால் மருத்துவமனை சூழல் அச்சம் மிகுந்ததாகக் காணப்படுகின்றது.

அத்துடன் கிராமங்களுக்குள் புகும் யானைகள் பயிரழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர். (ச-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பணியாளர்களின் எண்ணிக்கை மட்டுப்பாடு

## நிதியமைச்சு தகவல்

**கொழும்பு, ஜூலை 8**

**2023ஆம் ஆண்டில் அரசதுறையில் பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 2.9 சதவீதம் குறைந்துள்ளதாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

புதிய ஆட்சேர்ப்புகளை தற்காலிகமாக நிறுத்துதல், புதிய பணியிடங்களை உருவாக்குதல் மற்றும் ஓய்வுபெறுதல் ஆகியவை ஊழியர்களின் எண்ணிக்கை குறைவுக்கு வழிவகுத்துள்ளன.

மேலும் கடந்த ஆண்டு இறுதிக்குள், அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களின் மொத்த எண்ணிக்கையின்படி, பணியாளர்களின் பயன்பாட்டு வீதம் 77 சதவீதமாக உள்ளது. 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது நான்கு சதவீதம் குறைந்துள்ளது. அரசு செலவினங்களைக் குறைக்கும் வகையில் அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவதற்குப் பிரதான காரணம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



# நீர்மட்டம் ஆறுகளில் உயர்வு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுகங்கை மற்றும் நில்வள கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# கடன் மறுசீரமைப்பால் வலுசக்தி வலுப்பெறும்

## அமைச்சர் இந்திக தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 8

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியால் கடந்த நெருக்கடியின்போது முடங்கிக்கிடந்த வலுசக்தித்துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடைமுறைப் படுத்த முடியும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

கடந்தகால நெருக்கடி நிலையின்போது வலுசக்தித்துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின. ஆனால், தற்போது இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. சட்ட ரீதியிலான நிலைமைகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றி, நாட்டில் நிலவும் வலுசக்தி நெருக்கடியைத் தீர்க்க பெரும் உதவியாக இருக்கும்.

மின்சார சபை நட்டமின்றி செயற்படும் நிலையை ஏற்படுத்த முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# சிகிச்சை மறுப்பு 2 மாத சிசு சாவு!

## சுகாதார அமைச்சு விசாரணை



கொழும்பு, ஜூலை 8

மாத்தறை - கொடவிலப் பகுதியிலுள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற மறுக்கப்பட்டதால் 2 மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதையடுத்து பெற்றோர் உடனடியாக மாத்தறை மாவட்ட புதிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு குழந்தையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும், அவசர சிகிச்சைப் பிரிவு செயற்படவில்லை எனவும் பணியாளர்கள் கூறியதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் பயணித்து குழந்தையை மாத்தறை பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில், குழந்தை இறந்துவிட்டதாகவும், 30 நிமிடங்களுக்கு முன்னதாக அழைத்து வந்திருந்தால் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் எனவும் மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் பெற்றோர் முறைப்பாடளித்துள்ளனர். (ச-இ)

# நாடு கடத்தப்பட்ட 11 இலங்கையர்கள்

கொழும்பு, ஜூலை 8

இணைய குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலிருந்து 11 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நாட்டை வந்தடைந்ததாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. அவர்களிடம் மேலதிக விசாரணைகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது. (ச-இ)

# முட்டைக்கும் இனி வற்வரி

முட்டை விலையில் 15 சதவீத வற்வரி விதிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.டி.ஆர். அழககோன் தெரிவித்துள்ளார்.

இதனால் நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்த விலைக்கு முட்டைகளை விற்பனை செய்ய முடியாது. வெள்ளை முட்டை 43-47 ரூபாவுக்கும், பழுப்பு நிற முட்டை 45 -49 ரூபாவுக்கும் விற்கப்படவேண்டும். எதிர்வரும் ஜனவரி முதல் முட்டை விலையில் 15 சதவீத வற்வரி விதிக்கப்படவுள்ளது. அப்போது முட்டை விலை மேலும் உயரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தினம் தெரியுமோ?

ஊரெல்லாம் புதினம் தேடிப் பறந்து திரிஞ்சு பட்சிக்கு கடும் பஞ்சி பிடிச்சுப் போட்டுது. அதால இண்டைக்கு பேஸ்புக்கில பார்த்த கதையொண்டை ரிலாக்ஸுக்குச் சொல்லுவம். ஆட்டைக் களவெடுத்த ஒருத்தனை ஒராள் நடு றோட்டில வைச்சுப் பிடிச்சுப் போட்டார். எண்டாலும் விடுப்புப்பாக்க வந்தவைக்குள்ள ரண்டு, மூண்டுபேர் 'எதுக்கு ஆட்டைக் களவெடுத்தனீ?' எண்டு அவனிட்டக் கேட்டிருக்கினம். உடனேயே அவன் தன்ர கதையைச் சொல்லத் துடங்கினான்.

அந்தக் கதையை ஏன் கேக்கிறியள். எனக்கு நாலு பொம்பிளைப் பிள்ளையள். அதுவும் தாயில்லாப் பிள்ளையள். நானும் மனுசி செத்த கவலையில வேலை வெட்டிக்குப் போறேலை. ஏதோ என்ர 'நாவன்மையால' நாலு பேரைத் தட்டிச்சுத்தி எப்பிடியாவது சாப்பாட்டுக்கு காசு குடுத்திடுவன்.

போனகிழமை கடைசிப்பிள்ளை ரியூசனுக்கு காசு கொண்டு போகேலை. அவசரமாக காசு கட்டோணும் எண்டு ரியூசன் காரன் சொன்ன உடனை ஆத்துப்பதைச்சு, சைக்கிள் மிதிச்சு, காசைக் கொண்டுபோய்க் கட்டின பிறகுதான் பிள்ளையை ரியூசனுக்க விட்டவங்கள்.

அதோட இனி நாலு பிள்ளையளுக்கும் கலியாணம் கட்டி வைக்கோணும். நகை நட்டுச் செய்யோணும். அதுக்கும் நாவன்மையாலதான் சொத்து சேர்க்கோணும். ஏனெண்டால் எனக்கு உழைக்கப் பிடிக்காது. பிள்ளையள் இப்ப றோட்டில போகவும் ஏலாது. உந்தக் காவாலி, விடுகாலியள் ஒரேசேட்டை விடுறாங்கள். அப்ப நான்தான் காவலாப் போகோணும். அண்டைக்கும் கொஞ்சப் பேர் சேட்டை விட்டு, நான் தான் பொலிஸில சொல்லி பிடிச்சுக் குடுத்தனான்.

நாட்டு நடப்பு இப்பிடியிருக்கேக்க, எனக்கு உழைப்பு பிழைப்பு இல்லாட்டியும் நான் என்ர பிள்ளையளை நாவன்மையால நல்லாத்தான் வைச்சிருக்கிறன். அதுக்காக எனக்கு கன இடங்களில 'நல்ல அப்பா' விருதெல்லாம் தந்தவை. இந்தக் காலத்தில நாலு பொம்பிளைப் பிள்ளையளை வளர்க்கிறது எவ்வளவு கஷ்டம் எண்டு உங்களுக்குத் தெரியும் தானே? உங்களுக்கும் பொம்பிளை பிள்ளையள் இருக்கும் தானே.

எண்டுஅவன்சொல்லச்சொல்ல,கேட்டுக்கொண்டிருந்த சனங்களில கனபேர் விக்கி விக்கி அழத்தொடங்கிட்டினம். அதோட 'ஆளப்பாக்க அப்பிராணியா கிடக்கு உவன் கள்ளன் எண்டால் கடவுள் கூட நம்பாதே எண்டு விடுப்புப் பாக்க வந்தவையில கனபேர் பெரிசாவே சொல்லத் தொடங்கிட்டினம்.

ஆனாலும், சரி, உன்ர சொந்தக் கதையை விட்டிட்டு எதுக்கு ஆட்டை களவெடுத்தனி சொல்லு எண்டு சிலர் உடும்புப்பிடியா நிண்டிருக்கினம். அவன் ஒருக்கா எல்லாரையும் பார்த்திட்டு, நாலு பொம்பிளைப் பிள்ளையள் எண்டு பழையபடி தொடங்கிட்டான். 'பாவம் அவன், அவனுக்கு எங்களால முடிஞ்ச காசைக்குடுப்பம்' எண்டு கொஞ்சப்பேர் அங்க காசு சேர்க்கவும் வெளிக்கிட்டினம்.

ஆனாலும் கொஞ்சப்பேர் அந்தக் கதையில மயங்காமல், ஆட்டை ஏன் களவெடுத்தனீ? எங்க களவெடுத்தனீ?' எண்டு விடுத்து விடுத்துக் கேட்டுக் கொண்டே இருந்திச்சினம். அவனுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. சடாரெண்டு, 'என்ர அன்பு மகளே....!' எண்டு அழுதபடி திரும்ப தன்ர கதையைச் சொல்லத் தொடங்கிட்டான். சனங்களும் 'உனக்குச் சும்மா போறவாறவையோட தனகுறது தான் வேலை' எண்டு ஆட்டுக் கள்ளனைப் பிடிச்சவனுக்கு பேசத் தொடங்கிட்டினம். கடைசிவரைக்கும் அவன் ஏன் களவெடுத்தவன், எங்க களவெடுத்தவன் எண்டது மட்டும் ஒருத்தருக்கும் தெரியாமலே போட்டினமாம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பற்ற பொலிஸாரால் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

## புத்துவெட்டுவான் மக்கள் அதிருப்தி

**முல்லைத்தீவு , ஜுலை 8**

**ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் பகுதிகளில் குற்றச் செயல்கள் தலைதூக்கியுள்ளன. இதனை முல்லைத்தீவு - ஐயன்கன்குளம் பொலிஸார் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்கில் ஈடுபடுகின்றனர் என்று வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் புத்துவெட்டுவான் கிராம மக்கள் சார்பாக கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.**

ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் பகுதிகளில் இருந்து அகழ்வுப் பொருள்கள் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இரவு பகலாக அகழ்வு பொருள்கள் சட்ட விரோதமாக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஐயன்கன்குளம் பொலிஸார் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோருடன் தொடர்புகளைப் பேணுவதன் காரணமாகவே சட்டவிரோதச் செயல்கள் அகரித்துள்ளன. எனவே இதுதொடர்பில் நடவடிக்கை எடுத்து பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று அதில் பிரதேச மக்கள் வலியுறுத்தினர். (ச-25, 13)




## சந்நிதியிலிருந்து வேல் பயணம்

யாழ்ப்பாணம், ஜுலை 8

கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடி வேல் திருவிழாவின் கொடியேற்றத்தை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் நீண்டகாலப் பாரம்பரியம்மிக்க வேல் அனுப்பும் கதிர்காமப் பயணச் சிறப்புப் பூசை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (ப-66.27)

### மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜுலை 8

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-66)



சாவகச்சேரி - சங்கத்தானை முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அடியவர்கள் சூழ அண்மையில் இடம்பெற்றது. (ச-9)

### கலாதீபம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 8

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினரின் மாதாந்த வெளியீடான கலாதீபம் மின் இதழ் அண்மையில்வெளியிடப்பட்டுள்ளது. இதனை noolaham.org என்ற இணையத்தள முகவரிக்குச் சென்று தரவிறக்கம்செய்துபார்வையிடலாம் எனக் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தெரிவித்துள்ளார். (25,66)

## யோகபுரம் மகா வித்தி. தடகளத்தில் முதலிடம்

முல்லைத்தீவு, ஜுலை 8

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலய அணி வெற்றிவாகை சூடியது.

மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த புதன்கிழமை தொடக்கம் வியாழக்கிழமைவரை இந்தப் போட்டி நடைபெற்றது. (ப-19)



## கட்டடத் திறப்பும் சின்னம் சூட்டலும்

யாழ். மயிலணி சைவமகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாக் கட்டடத் திறப்பும் மாணவ முதல்வர் சின்னம் சூட்டும் விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நூற்றாண்டு விழாக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பண வரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உதவி கிடைக்கும். நண்பர்களின் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மகாவிஷ்ணு வழிபாடு நற்பலன்களைக் கூடுதலாகத் தரும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் போக்கில் கவனம் செலுத்தவும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் சகவியாபாரிகளின் போட்டிகளை முறியடித்து விற்பனையைப் பெருக்குவீர்கள்.

**கன்னி:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில்அனுகூலம்உண்டாகும்.மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள்முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள். வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டியிருக்கும். செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சம்பந்தருக்குப் பிறகு....?

பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் திருவுடல் திருகோணமலையில் நேற்று தீயுடன் சங்கமமாகிவிட்டது. தமிழ்த் தேசிய அரசியலில் ஒருபெரும் சகாப்தம் நம் கண்முன்னே முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது எல்லோரிடத்தும் தொக்கி நிற்கும் இமாலயக் கேள்வி, 'சம்பந்தருக்குப் பின்னர் எமது இனத்தினதும், தமிழரசுக் கட்சியினதும் நிலை என்ன?' என்பதுதான். உண்மையில் இந்தக் கேள்வியை, சம்பந்தர் உயிரோடு இருக்கும் போதே எழுப்பி, அதற்கான பதிலைக்கண்டு, பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்கியிருக்கவேண்டும். எப்போதுமே வெள்ளம் வந்த பின்னரே அணைகட்டுவதே நமக்குப் பழகிப்போய்விட்டதால், சம்பந்தரில்லாக் காலத்திலேயே அவருக்குப் பின்னர் என்ன செய்யப்போகிறோம் என்ற கையறுநிலையில் நிற்கிறோம். என்னதான் சம்பந்தர் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக உதறியிருந்தாலும், அவரே அந்தக் கட்சியின் நகர்வுகளைத் தீர்மானிப்பவராக இருந்தார். அவர் சொன்னதைச் செய்பவர்களாகவே மற்றவர்கள் இருந்தனர். இவ்வாறு தன் சொல் கேட்கும் நிலையில் கட்சி இருக்கும்போதே, தனக்குப் பின்னரான காலத்தில் தமிழ்மக்களின் அரசியல் பயணத்துக்கான எதிர்கால வழிவகைகள் குறித்து சம்பந்தர் திட்டமிட்டிருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர் தமிழ்மக்களின் நலனை விடுத்து தனது தனிப்பட்ட அரசியல் நலனை முன்னிலைப் படுத்த முற்பட்டமையும் நாமிருக்கும் இப்போதைய கையறு நிலைக்குக் காரணம்.

தன் உடல்நிலை ஒத்துழைக்க மறுக்கத் தொடங்கியதும், தன் இருப்பை கட்சியைப் பலப்படுத்துவதற்காக, தன்னைப்போலவே ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கையற்ற சிலரை கட்சிக்குள் கொண்டுவந்து, அவர்களைத் தனது அரசியல்வாரிசாக மாற்ற சம்பந்தர் மிகக் கடுமையாக முயன்றார். ஆனால், சுமந்திரன், விக்னேஸ்வரன், குகதாசன் என்ற அவரது இத்தகைய வாரிசு அரசியலுக்காகக் கொண்டுவரப்பட்டவர்களே பின்நாள்களில் அவரை ஓரங்கட்டுவதில் முன்னின்ற அபத்தமே நிகழ்ந்தது. காலப்போக்கில் சம்பந்தரின் குரல் தேய்வடைந்து, அவரின் சொல் சர்வதேசத்திடம் மட்டுமல்ல, கட்சிக்குள்ளேயே செல்லாக்காசாக மாறியது. அதன் ஆகப்பிந்திய உதாரணமே, தமிழரசுக் கட்சி பலகூறுகளாக உடைந்து, தலைமைத்துவப் போட்டி ஏற்பட்டு, இப்போது நீதிமன்ற வழக்குகளை எதிர்நோக்கியுள்ளமை. சம்பந்தர் தேகாராக்கியத்தோடு இருந்திருந்தால், இப்படி தமிழரசு பல கூறுகளாகச் சிதைந்திருக்காது. அவ்வளவு ஏன், தலைமைத்துவப் போட்டி கூட ஏற்பட்டிருக்காது. மிகப்பெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தர், தன் கடைசிக்காலத்தில் உடல்நிலை காரணமாகவோ அல்லது சாகும்வரை நாடாளுமன்றப் பதவியில் இருக்கவேண்டுமென ஆசைப்பட்டதாலோ என்னவோ தமிழ்மக்கள் தொடர்பிலும், கட்சி தொடர்பிலும் தொலைநோக்கான தீர்மானத்தை எடுக்காததன் பாதக விளைவையே இனிவரும் நாள்களில் தமிழினமும், தமிழரசுக் கட்சியும் எதிர்கொள்ளப் போகின்றன.

சம்பந்தருக்குப் பின்னான காலத்தில், அவரைப் போல சுயநலத்தை விடுத்து, இனநலனை முன்னிறுத்தி, வரலாற்றை எடுத்துரைத்து, தமிழ்த் தேசியத்தின் பாதையில் தீர்க்கமாகவும், தெளிவாகவும் தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்திடமும், சிங்களத் தலைவர்களுடனும் முன்வைக்கக்கூடிய அரசியல் ஆளுமையில் எவரும் இல்லை. குறைந்தபட்சம் ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூவைப் போல, ஓரளவுக்கேனும் அதை நிவர்த்திக்கக்கூடியவர்களுமில்லை என்பதுதான் ஆகப்பெரும் அவலம், கட்சியின் நிலையும் அப்படித்தான். நீதிமன்ற வழக்கு முடிந்தாலும் கூட, கட்சி பலகூறுகளாக, ஒருவரை மற்றவர் இழுத்து விழுத்தும் போக்கே தொடரப்போகின்றது. அதனால் அந்தக் கட்சி முன்னரைப் போல தமிழினத்தின் உரிமைக்காக தன்குரலை வீரியத்தோடு முன்வைப்பதும் சாத்தியமற்றது. ஏறக்குறைய தமிழினம், இப்போது ஒரு வெற்றிடத்தில் நிற்கின்றது. இனி எல்லாவற்றையும் நாம் முதலில் இருந்தே தொடங்கவேண்டும்.




# தேர்தலைப் பிற்போட அனுமதிக்க இடமளியோம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றில் முன்னிலை

கொழும்பு, ஜூலை 8

**பொதுமக்களின் ஜனநாயக அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை மறுதலிக்கும் வகையில் ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடுவதை அனுமதிக்கவே முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரட்ண தெரிவிக்கையில்;

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் உயர்நீதிமன்றில் ஆஜராகவுள்ளன.

ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான விடயம் பொதுமக்களின் வாக்களிக்கும் உரிமை. அந்தவகையில் தேர்தல்களை எந்தவொரு காரணத்துக்காகவும் பிற்போடக்கூடாது. மக்களின் இறைமை பாதுகாக்கப்படும் அதேநேரம், நாட்டின் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்- என்றார். (ச-இ)

## கிரிக்கெட் பயிற்றுநராக தற்காலிகமாக சனத்

யாழ்ப்பாணம்,, ஜூலை 8

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளரான கிறிஸ் சில்வர்வுட் பதவி விலகியதைத் தொடர்ந்து, வெற்றிடமாகவுள்ள பதவிக்கு தற்காலிகமாக சனத் ஜயசூரிய தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர் நியமிக்கப் படும்வரை சனத் ஜயசூரிய செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் ரூ. 73.3 பில்லியன் நட்டம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2022-2023 நிதியாண்டில் 73.3 பில்லியன் ரூபா நட்டத்தைச் சந்தித்துள்ளது என்று நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அண்மைய வரவு - செலவுத் திட்ட நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் 2021 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் நட்டம் 56 வீதத்தால் குறைந்துள்ளது.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் விமானப் பயணிகளின் வருமானம் 293.3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேவேளை விமான நிறுவனத்தை நிதிரீதியாக, நிலையானதாக மாற்றும் வகையில், புதிய முதலீட்டாளர்களை உள்வாங்க, அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அத்தியாவசிய சேவையாக மின், கனியவள உற்பத்தி

கொழும்பு, ஜூலை 8

மின்சாரவிநியோகம், கனியவள உற்பத்தி என்பன தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் 2ஆம் பிரிவுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. (ச-இ)

## சுற்றுலாத்துறையால் 1.5 பில்லியன் டொலர்

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலாத்துறையின் மூலம் இலங்கையின் வருமானம் 1.5 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்தில் மட்டும், சுற்றுலா வருவாய் 113.4 மில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### நாளை

09.07.2024

செவ்வாய்க்கிழமை - ஆனி - 25

சுபநேரம் : 10.28 - 11.58

ராகுகாலம் : 02.58 - 04.28

சதுர்த்தி விரதம்


### நாளொரு நல்வார்த்தை

உண்மை மனிதனுக்குச் சொந்தம். பிழை அவன் காலத்துக்குச் சொந்தம்.

- கதே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் கட்சிகளை வளைக்க ரணில் வியூகம்



**கொழும்பு, ஜூலை 8**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமானவர்களை வைத்து ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை தமது கூட்டணிக்குள் கொண்டு வரும் ரகசிய பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவால் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டணியில் இந்த இரண்டு கட்சிகளும் இருந்தன. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ஐ.தே.க.வின் கூட்டணியிலேயே இந்தக் கட்சிகள் இருந்தன.

2020 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியுடன் அவை கைகோர்த்தன.

இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க தமது கூட்டணிக்குள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை கொண்டுவந்தால் முஸ்லிம் மக்களின் குறிப்பிடத்தக்களவான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கணக்குப் போட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீமுடன் இதுதொடர்பில் ரகசிய பேச்சுகள் இடம்பெற்றுள்ள போதிலும் அவர்கள் இதுவரை எவ்வித சாதகமான பதிலையும் அளிக்கவில்லை என்று தெரியவருகின்றது. (ச-இ)

## ஜப்பான் கைகொடுத்தால் அபிவிருத்திகள் தொடரும்

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததை அடுத்து சர்வதேச நாடுகளோ, அமைப்புகளோ நிதியுதவி வழங்காததன் காரணமாக முடங்கிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ஜப்பானின் உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைக்கு அமைவாக இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கடன் மறுசீரமைப்புச் செயன்முறை தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன்களை மீள்செலுத்த முடியாத நிலை உள்ளடங்கலாக நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது.

சர்வதேச நாணயநிதியத்தை நாடி, இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதியுதவிச்செயற்றிட்டம் தொடர்பில் இறுதிக்கட்ட இணக்கப்பாட்டை எட்டியதன் ஊடாக, தற்போது நாடு மீண்டும் மூச்சு விட ஆரம்பித்திருக்கின்றது.

நாடு வங்குரோத்து நிலையடைந்திருந்த காலப்பகுதியில் சர்வதேச நாடுகளோ அல்லது அமைப்புகளோ எமக்கு எவ்வித நிதியுதவியையும் வழங்காததால் உள்நாட்டில் நெடுஞ்சாலை கட்டுமானம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க இயலவில்லை.

இந்தநிலையில் ஜப்பானிடம் இலங்கையில் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பானின் உதவிகள் கிட்டும் பட்சத்தில், இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ச-இ)

## வெளிநாட்டவருக்கு கட்டுநாயக்கவிலேயே இனிமேல் 'லைசென்ஸ்'

கொழும்பு, ஜூலை 8

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலேயே வழங்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டில் தங்கியிருக்கும் குறுகிய காலத்துக்காக இந்தச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் விமான நிலையத்திலேயே தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அனுமதி பத்திரங்களைப் பெறுவதற்கு இதுவரை வெரஹெர வரை செல்ல வேண்டியிருந்தது.

இந்தநிலையிலேயே சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்தப் புதிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## விடாமுயற்சியின் தோல்வி வரலாற்றுச் சோகமே

### சட்டத்தரணி ஸ்ரீகாந்தா சம்பந்தருக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் ஓர் இணக்கமான அரசியல் தீர்வுக்காக தொடர்ந்து பாடுபட்டார் இரா. சம்பந்தன். ஆயினும், அவரின் முயற்சிகள் சிங்கள அரசியல் சக்திகளின் அதிகாரப் போட்டியில் அடிபட்டுப்போயின என்பது ஒரு வரலாற்றுச் சோகமாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா இரங்கல் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தனது இளம் வயதிலிருந்தே அரசியல் ஆர்வம் கொண்டிருந்த சம்பந்தன், 1961 இல் 28 வயதுடைய இளம் சட்டத்தரணியாக, தமிழரசுத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடன் பனாகொட இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது அதிகம் அறியப்பட்டிராத நிகழ்வாகும்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது முதல் தீவிர அரசியலில் அவர் ஈடுபட ஆரம்பித்தார். அவரின் ஆங்கில சொல்லாற்றலும் ஆளுமைப் பண்புகளும் அரசியல் அவதானிகளின் கவனத்தை தேசிய மட்டத்தில் ஈர்க்கத் தொடங்கின.

மறைந்த தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோருடன் சம்பந்தனும் இணைந்திருந்த 'மூவர் தலைமை' இந்திய அரசின் தீர்வு நடவடிக்கைகளில் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

போருக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் ஓர் இணக்கமான அரசியல் தீர்வுக்காகத் தொடர்ந்து அவர் பாடுபட்டார். ஆயினும், அவரின் முயற்சிகள் சிங்கள அரசியல் சக்திகளின் அதிகாரப் போட்டியில் அடிபட்டுப் போயின என்பது ஒரு வரலாற்றுச் சோகமாகும் - என்றுள்ளது. (ச-26)



## ரணிலுக்கே ஆதரவுக்கரம்

### லொஹான் தெரிவிப்பு

கட்சி குறித்து சிந்திக்கும் நேரம் இதுவல்ல. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குவேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நாட்டை மீட்டெடுத்த , சிறந்த வேலைத்திட்டம் உடைய, வாய்ச்சொல் வீரர் அல்லாத சிறந்த தலைவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவேன். எனவே, நாட்டு மக்களும் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

பொதுஜன பெரமுன என்பது நாமல், சாகர காரியவசம் போன்றோருக்கு உரித்தானது அல்ல. அது பலமான அமைப்பு. கூட்டு முடிவுகளே எடுக்கப்பட வேண்டும். தற்போது நாட்டுப்பற்றுடனேயே சிந்திக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## அணையாடை வவுச்சர் செல்லுபடிக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 8

பாடசாலை மாணவிகளுக்கான அணையாடைகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாணவர்கள் ஸ்கேன் செய்யப்படாத வுச்சர் மூலம் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 10 வரை அவற்றைக் கொள்வனவு செய்யமுடியும்.

முன்னதாக 2024 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவிகளுக்கு அணையாடை வழங்கும் திட்டத்தின் முதல் கட்டம் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதியுடன் முடிவடையும் என அறிவிக்கப்பட்ட நிலையிலே தற்போது காலம் நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதஅடையாளம் பாதுகாப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8
மதத்தைப் பாதுகாக்கும் பணி வெறும் வார்த்தைகளோடுமட்டும்நின்றுவிடாமல் நடைமுறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஒவ்வொரு மதங்களின் அடையாளமும் எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கப்பட வேண்டும். மத நல்லிணக்கம் நாட்டில் கட்டியெழுப்பப்பட வேண்டும். எமது ஆட்சியில் மத சுதந்திரம் நிலைநாட்டப்படுவதுடன் ஒவ்வோர் இனங்களின் அடையாளம் காக்கப்படும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ப-இ)

**யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்**

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின்
வருடாந்த பொதுக்கூட்டம்
எதிர்வரும் (21.07.2024)
ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு
**கல்லூரி நூலக மண்டபத்தில்**
நடைபெறவுள்ளது. அனைத்து
பழைய மாணவர்களையும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**செயலாளர்.**
**பழைய மாணவர் சங்கம்.**

(CS/55624) J-1

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Best Wishes **திரு. நா.சிவநேசன்** Best Wishes




யாழ்ப்பாணம் கல்விக் கோட்ட
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
**திரு.நா. சிவநேசன்** அவர்கள்.
இலங்கை கல்வி நிர்வாக சேவை
தரம் III பதவிக்கு சேவை அனுபவம்
மற்றும் திறமை அடிப்படையில்
தெரிவாகி இன்று 08.07.2024 மடு
கல்வி வலயத்தில் **பிரதிக் கல்விப்**
**பணிப்பாளராக** (கல்வி நிர்வாகம்)
பதவியேற்கின்றார்.
அவரைப் **பாராட்டி**
**வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்: **அதிபர்கள்,**
**கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்,**
**யாழ்ப்பாணம் கல்விக்கோட்டம்.**

(CS/55621) J-1

**மணிவிழா வாழ்த்தும்**
**சேவை நலன் பாராட்டுவிழா வாழ்த்தும்**







**திருமதி நந்தினி மகேந்திரன்**
**உபஅதிபர் SLTS I**
**36 வருடங்கள்**

**திருமதி அனுசியா விந்தன்**
**ஆசிரியர் SLTS I**
**(Sp.Trd English)**
**33 வருடங்கள்**

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி
**08.07.2024** அன்று ஓய்வுபெறும்
**உப அதிபர் திருமதி நந்தினி மகேந்திரன்**
அவர்களையும் **30.06.2023** அன்று **ஓய்வு பெற்ற**
**ஆசிரியர் திருமதி அனுசியா விந்தன்** அவர்களையும்
தமது ஓய்வுக் காலத்தில் சகல நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* **ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/ செங்குந்த இந்துக்கல்லூரி**

(CS/55569) J-1

**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக்**
**கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**அல்லின்வீதி காரைநகர்**
**பதிவு இலக்கமும் திகதியும் : J/22 – 15.09.1999**

**பதவி வெற்றிடம்**

01. பதவி - பொதுமுகாமையாளர்
சம்பளக் குறியீடு - 101/09
சம்பள அளவுத்திட்டம் - 20200-250x10-260x10-25300 (கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய இதர படிகளும் வழங்கப்படும்.)

வெற்றிடம் - 01

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை /மேற்பார்வை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை /மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த. உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 04 வருட அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

02. **ஏனைய விபரம்**

1. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)
2. சங்கம் கோருகின்ற ரொக்கப்பிணை. ஆதன பிணை என்பவற்றினை தெரிவு செய்யும் பணியாளர் செலுத்துதல் வேண்டும்
3. சங்கங்களில் பணிபுரிவோர் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரிகள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி இப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோ பிரதியினையும் இணைத்து விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிட்டு தலைவர் காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். அல்லின்வீதி. காரைநகர். என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.
5. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
6. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள். தகுதி இல்லாத விண்ணப்பங்கள் முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்
7. விண்ணப்ப முடிவுத்திகதி 22.07.2024.

**தலைவர்**
**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**
**அல்லின் வீதி. காரைநகர்.**
**தொலைபேசி இல:- 0213737754**
(இது தொடர்பாக 05.07.2024ம் திகதிய இப் பத்திரிகையில் பிரசுரித்த விளம்பரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.)

(CS/55617) J-1

**மரண அறிவித்தல்**



தோற்றம் 30 . 05 . 1950

மறைவு 04 . 07 . 2024

**செல்லையா லோகநாதன்**

**(சபரி நதி ரயர் கடை உரிமையாளர்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். இணுவில் கிழக்கு அங்களப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா லோகநாதன் (சபரி நதி ரயர்க்கடை உரிமையாளர்) கடந்த 04.07.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சீனிக்குட்டி (இளையபிள்ளை) தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும். இராசலட்சுமியின் அன்புக் கணவரும் செந்தூரன் (லண்டன்). அனுஷா. அமுதினி (லண்டன்). கோகிலன். ராகுலன். வாசுதேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். தர்ஷினி (லண்டன்). சதீஸ்குமார். மகேந்திரராசா (லண்டன்). மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்றவர்களான நடராசா. செல்வரத்தினம். மனோன்மணி. சண்முகநாதன் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான கண்மணி. வேலாயுதபிள்ளை. சுப்பிரமணியம். நாகராசா. கிருஷ்ணபிள்ளை. தர்மலிங்கம் மற்றும் இராசரத்தினம். பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம். நாகையா. யோகநாதன் மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும். ஹம்ஷவர்ஷனி. கௌசிகா. ஜெசிகா. திலீபன் ஆகியோரின் அன்பு மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 707 2106**

**கிழக்கு, இணுவில்.**

(CS/896) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிக்கப்படாத இலங்கைக்காக பாடுபட்டவர் சம்பந்தன்!

## ஜனாதிபதி புகழாரம்

திருகோணமலை, ஜூலை 8

"பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் சம்பந்தன். இந்தநிலையில் பொலிஸ் அதிகாரமற்ற 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த முயற்சிகளை எடுத்து வருகின்றேன்" - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற, தமிழினப் பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் உரையாற்றுகையில்;

"பொலிஸ் அதிகாரம் இல்லாமல், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இப்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றி பின்னர் கலந்துரையாடலாம். புதிய பரிந்துரையாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் கட்டமைப்புக்குள் அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

மேலும், நவாஸ் ஆணைக்குழு அறிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது. ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட மூலத்தை (TRC) முன்வைக்கத் தயார் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்னிடம் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், மக்கள் சபை முறை குறித்தும் இப்போது கலந்துரையாடி உடன்பாடு எட்டியுள்ளோம். இந்தக் கலந்துரையாடல்களை முன்னோக்கிக் கொண்டு சென்று நிறைவு செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம். சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காகவும், இலங்கை மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த தலைவர். நாம் இருவரும், பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். அதற்காக நாங்கள் இருவரும் உடன்பாட்டுடன் கலந்துரையாடல்களை முன்னோக்கிக் கொண்டு சென்றதுடன் இந்தப் பணியை நிறைவு செய்ய அனைவரும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" - என்றார்.

(அ.26)

# சுயநிர்ணய உரிமையே சம்பந்தரின் இலக்கு!

## ரணிலுக்கு மாவை பதிலடி

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதைப் போல, எமது பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா பிரிக்கப்படாத இலங்கைக்காகப் பாடுபடவில்லை. அவர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையே இலக்காகக் கொண்டிருந்தார் - இவ்வாறு ஜனாதிபதிக்கு பதிலடி கொடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை .சோ. சேனாதிராஜா.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற,தமிழினப் பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க 'சம்பந்தனும் நானும் பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்' எனத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியபோதே மாவை. சேனாதிராசா, ரணிலுக்குப் பதிலடி கொடுத்துள்ளார். அவர் உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகவும், தமிழரைத் தமிழரே ஆளவேண்டும் என்ற அந்த இலக்கோடும் இலட்சியத்தோடுமே தன் இறுதிக் காலம்வரை பெருந்தலைவர் சம்பந்தன் உழைத்தார். சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு உலகின் பலநாடுகளுக்கும் விடுதலையைப் பெற்றுக்கொடுத்தன. அதைப் போன்றே, தமிழ் மக்களும் சுயநிர்ணய உரிமையோடு, தம்மைத்தாமே ஆள வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். உள்ளக சுயநிர்ணய உரிமை கிடைக்காவிட்டால், வெளியக சுயநிர்ணய உரிமைக்கான வழிகளுக்குச் செல்வோம் என பெருந்தலைவர் சம்பந்தர் கூறியிருந்தார். எனவே ஜனாதிபதி கூறியதைப் போல, அவர் இலங்கை பிளவுபடாதிருப்பதை மட்டுமே சம்பந்தர் இலக்காகக் கொள்ளவில்லை. வெளியக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதிலேயே அவர் தன் உயிர்மூச்சு உள்ளவரை பயணித்தார் - இவ்வாறு தெரிவித்தார்.

(அ-125)



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு கடந்த புதன்கிழமை சென்றார். அங்கு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம். ஹனீபாவைச் சந்தித்து, மருத்துவமனையின் தேவைகள் குறித்து கலந்துரையாடினார்.

(ப-56)

# கிராம ஊர்வலம்

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கிராம ஊர்வலம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. கிராம ஊர்வலம் இன்று மாலை 4 மணிக்கு ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ச-66)


**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2024**

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயற்குழுவின் 23.06.2024 அன்றைய கூட்டத் தீர்மானத்திற்கு அமைய சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 14.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும். கல்லூரியின் பழைய மாணவராகிய உங்கள் அனைவரையும் உறுப்பினராக கலந்துகொண்டு கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

அன்புடன்
செயலாளர்.



# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1963

மறைவு 07 . 07 . 2024



**வர்ணகுலசிங்கம் ஷாந்தினி (டுஷா)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வர்ணகுலசிங்கம் ஷாந்தினி (டுஷா) நேற்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் (சச்சி) - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வர்ணகுலசிங்கத்தின் அன்பு மனைவியும், விதுஷா, தினுபா, லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தன் அவர்களின் அன்பு மாமியாரும், இராஜ்குமார் (பிரான்ஸ்), சியாமளா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசமலர் (நோர்வே), ஜெகதீஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (கனடா), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), தனபாலசிங்கம் (கனடா), ஜெயபாலசிங்கம் (ஜேர்மனி), சிவபாலசிங்கம் (சுவிஸ்), சிவமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவரூபன், கஜன், சஹானா, மயூறதன், லியானா, லக்ஷா, லமிஷா, அனுருந்தன், அச்சுதன், நர்த்தனன், சானன், பிரவீன், கஜீத், அஞ்சனா, மயூறி, நிக்ஷன், துஷான், நயோமிகா ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**தொடர்புகளுக்கு:-**

**வர்ணகுலசிங்கம் - 44 781 702 1072**
**விதுஷா - 44 787 705 2734**
**குமார் - 33 766 396 515**
**சியாமளா - 077 914 3137**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/55625) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இசைப்பேழை வெளியீடு


அச்சுவேலி, காட்டுவளவு கந்தசுவாமி மீது, ரஜரட்ட பல்கலைக்கழக மாணவி பா.அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட 'அர்ச்சனைப் பூக்கள்' என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா, காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றலில் சப்பரத் திருவிழா நிறைவில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான.ஆதவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-9-66)

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில், திருவாசகம் முற்றோதல் நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிக்க சிலாபம் முன்னேஸ்வரம் சிவாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், இந்தியாவிலிருந்து வருகை தந்த ஆன்மீகப் பெரியோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)





குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா, கடந்த வியாழக்கிழமை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. (ப-66)

யாழ்ப்பாணம், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும், கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ. இளங்கோ தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. (ப-66)





ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாராகத் திகழ்ந்து 91 ஆவது வயதில், கடந்த வருடம் சிவபதமெய்திய, பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா நகுலேஸ்வரக் குருக்களின் ஓராண்டு பூர்த்தி நினைவுதின நிகழ்வு, கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-27)




## பரிசில் நாள் நிகழ்வு

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பரிசில்நாள் நிகழ்வு அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் கொடிகாமத்திலுள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆனந்தமயில் நித்திலவர்ணன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரும் பழைய மாணவியுமான திருமதி சுகிர்ஜினி சர்வேஸ்வரனும், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை மருத்துவ அதிகாரியும் பழைய மாணவருமான ரதிமோகன் தேனுசனும், தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் திருமதி சுதர்சினி சதீஸ் கண்ணாவும் கலந்துகொண்டனர். (ம-22,159)

கிளி. மாவட்ட சமுர்த்தித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலில் பெண்கள், குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகார அமைச்சின்கீழ் தேசிய சமூக வளர்ச்சி நிறுவனத்தினால் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி தொடக்க நிகழ்வு, கிளி. தேசிய சமூக வளர்ச்சி நிறுவன மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரவீந்திர விதானாராச்சி, கிளி.மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளி. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி இன்பராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-22,19-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் செலுத்தாததால் தண்ணீர் தர மறுப்பு

## அக்கராயன் மக்கள் தவிப்பு



**கிளிநொச்சி, ஜூலை 8**

**கிளிநொச்சி - அக்கராயனில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள பணம் செலுத்தப்படாமையால் இரண்டு மாதங்களுக்கு மேலாக குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; இங்கு 2010 மீள்குடியேற்றத்தின் பின்னர் அக்கராயனில் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பணம் அறவிடப்படுகின்றது.

அதற்கமைய அக்கராயன் மகா வித்தியாலயம் முன்பாகவுள்ள நீர்த்தாங்கியிலிருந்து 250க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இந்தக் குடிதண்ணீரைப் பெறும் சில பயனாளிகள் பணம் செலுத்தத் தவறியதால் விநியோகிக்கப்பட்ட தண்ணீர் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் குடிதண்ணீர்த் திட்டத்தை நம்பியுள்ள மக்கள் தற்போது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம், மனிதாபிமான அடிப்படையில் நீர்த் தாங்கிகள் மூலமாவது குடிதண்ணீரை விநியோக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



### யாழ்ப்பாணத்தில்

# புகைப் பரீட்சித்தல் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 8

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வாகனப் புகைப் பரீட்சித்தல் பயிற்சிப் பட்டறை யாழ்.மாவட்டச் செயலகப் பயிற்சி நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் ரி.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகர் கே.மதிவண்ணன், திணைக்களத்தின் பரிசோதனை அலுவலர் என்.எம்.எம்.மர்சூக், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் சார்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்தச் செயற்றிட்டம் யாழ்.மாவட்டத்தில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-66)



# புத்துயிர் பெறும் ஸ்கந்தபுரம் வீதி

## பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்திலிருந்து முக்கொம்பன்வரை செல்லும் வீதி கிரவல் மண் குவிக்கப்பட்டு புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

3 கிலோமீற்றர் தூரம்கொண்ட இந்த வீதியில் பெருங்குண்டும் குழிகளும் ஏற்பட்ட காரணத்தால் பேருந்துகள் உட்பட அனைத்து வாகனங்களும் பயணிக்கவே முடியாத நிலைமை காணப்பட்டது.

இதனால் அந்தப்பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர் கொண்டிருந்தனர். இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் முயற்சியில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் இந்த வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது. (ப-13)

# போலி விசாவுடன் யாழ்.வாசி கைது

கொழும்பு, ஜூலை 8

போலியான இலங்கைக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குச் செல்லவிருந்த இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சவூதியில் இருந்து வேறு விமானம் மூலம் கனடா செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் குறித்த கடவுச்சீட்டு கனேடிய விசாவைக் கொண்டுள்ள மற்றுமொரு இலங்கையருடைய்து என்றும்18 இலட்சம் ரூபாவை தரகர் ஒருவரிடம் கொடுத்து, கடவுச்சீட்டை போலியாகத் தயாரித்துள்ளதாகவும் குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளிடம் குறித்த இளைஞன் தெரிவித்துள்ளான். (ச-இ)

# இரா.சம்பந்தனுக்கு நெடுந்தீவில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 8

தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவுக் கிளையின் ஏற்பாட்டில், கட்சி அலுவலகத்தில் தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவுக் கிளை செயலாளர் வி.ருத்திரன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வண.போதகர் யூட் எழில் அமுதன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் பரமேஸ்வரி, கட்சியின் நெடுந்தீவுக் கிளை உபதலைவர் மைக்கல் யேசுதாஸன், கட்சியின் நெடுந்தீவுக் கிளை உபசெயலாளர் சுதன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ப-20)





முல்லைத்தீவு, பாலிநகர் மகா வித்தியாலயத்தின் தரம் - 9 மாணவர்களால் தொழில்நுட்பப் பாடத்தினுடைய ஓர் அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்ட சந்தைச் செய்முறை நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ச-25,13)

# 10,000 பாடசாலைகள் மூன்றாண்டில் டிஜிற்றல்

கொழும்பு, ஜூலை 8

அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளை டிஜிற்றல் மயமாக்க எதிர்பார்க்கிறோம் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், நவீன வகுப்பறைகள் என்பன அவசியமாகும். எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கலில் உள்வாங்கப்படும். அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப் பினூடாக இணைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர்...

ஜூன் மாதம் 30 ஆம் திகதி இரவு பெருந்தலைவர் சம்பந்தன், கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் உடல் நலக்குறைவால் காலமானார். அவரது திருவுடல் கொழும்பில் உள்ள மலர்ச்சாலை, நாடாளுமன்றம், யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கு என்பவற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் விமானம் மூலம் திருகோணமலைக்கு 4 ஆம் திகதி வியாழக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. திருகோணமலையில் உள்ள பெருந்தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அவரது திருவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர்.

இந்தநிலையில் பெருந்தலைவர் சம்பந்தனின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் கு. அண்ணாமலை, ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், இ.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ. சரவணபவன், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், குடும்ப உறவுகள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் அவரது திருவுடல் திருகோணமலை இந்து மயானத்துக்கு மாலை 4 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தீயுடன் அவரது உடல் சங்கமமானது. (அ-26-125-66)

## இன்று...

யடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பாக இன்று இடம்பெறவுள்ள கண்டன எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்று தென்மராட்சி சமூக பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது குறித்து 30 சமூக பொது அமைப்புகளின் சார்பில், குறித்த ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூரண ஆதரவை கூட்டாக வழங்குவதோடு தென்மராட்சியில் இயங்குகின்ற சமூக, பொது அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

"கடந்த காலங்களில் எமது மண்ணில் இடம்பெற்ற அனைத்துப் போராட்டங்களுக்கும் தென்மராட்சியில் உள்ள ஒவ்வொரு சமூக மற்றும் பொது அமைப்புகள் என்பன தனித்தனியாகவே எமது ஆதரவைத் தெரிவிப்பது வழமை. ஆனால் இன்று முன்னெடுக்கப்படுகின்ற போராட்டமானது மனிதாபிமானத்தையும் எமது மக்கள் அனைவரினதும் இலவச சிகிச்சை உரிமையையும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படுவதால் தென்மராட்சியில் உள்ள அனைத்து சமூக பொது அமைப்புகளும் ஒன்றிணைந்து கூட்டாக ஆதரவு அறிக்கையை வெளியிடுகின்றோம்.

எனவே தென்மராட்சியில் உள்ள சிறிய வியாபாரிகள் முதல் பெரும் வர்த்தகர்கள் மற்றும் அனைத்துத் தொழில் அமைப்புகளும் பூரண பங்களிப்பை வழங்குவோம் என்பதை உரிமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்" - என்றுள்ளது. (அ-27-9-159)

## ஈழத்...

தமிழ் மக்களோடு உடனிருப்பார் - இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் இறுதியஞ்சலி நிகழ்வில், இந்தியாவில் இருந்து வருகைதந்த அண்ணாமலையும் பங்கேற்றிருந்தார். அங்கு அவர் அஞ்சலி உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சம்பந்தன் ஐயா, தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தை அடைவதையே தனது வாழ்வின் பிரதான இலட்சியமாகக் கொண்டிருந்தார். அந்த நோக்கம் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. அதற்கு பாரதப் பிரதமர் மோடியும் பாரதிய ஜனதாக் கட்சியினரும் எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு துணைநிற்பார்கள் என இந்த இடத்தில் உறுதிகூறுகின்றேன்.

தமிழ் மக்கள் எந்தளவுக்கு சம்பந்தன் ஐயாவை நேசிக்கின்றார்கள், மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியாகவே நான் இங்கு நின்றுகொண்டிருக்கின்றேன். தமிழ் அரசியல் தலைமைகள் ஒற்றுமையாக சம்பந்தன் ஐயா விட்டுச் சென்ற பணியை பிணைப்புடன் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். அதுவே அவர் இறுதியாகச் சொல்லிச் சென்றுள்ள செய்தியாக நான் பார்க்கின்றேன் - என்றார். (அ-ச-125)

## மணமாகி...

அச்சுவேலி - இடைக்காடுப் பகுதியைச் சேர்ந்த, கிருஷாந் பாமதி (வயது-31) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். திருமணம் செய்து இரண்டு வருடங்களேயான நிலையில் குறித்த இளம்பெண் உயிரிழந்திருப்பது அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-66)

## 17 வயதுச்...

ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் நடந்துள்ளது. சிறுமியின் சடலம், பிரேத பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ச-213)

## மன்னாரில்...

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னார் மறைமாவட்ட அருட் பணியாளரும் மன்னார் மடு மாதா சிறிய குருமடத்தின் உதவி இயக்குநருமான அருட்தந்தை கே.ஜொனார்த்தனன் அடிகளார் (வயது - 31) உயிரிழந்தார்.

தலைமன்னார் ஆலயத்தில் மாலை நேரத் திருப்பலியை ஒப்புக் கொடுத்த நிலையில் மீண்டும் தலைமன்னாரில் இருந்து மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்தபோதே இந்த விபத்து மாலை 6.50 மணியளவில் நேர்ந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த குறித்த அருட்தந்தை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (அ-56)

## ஜனாதிபதித்...

கிடைக்கும். அன்றிலிருந்து ஒருவார காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த வாரத்துக்குள் வாக்காளர் பட்டியலைச் சான்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-66)

## ரணிலுக்கே...

பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆதரவும் தொடரும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அந்தக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான பஸில் ராஜபக்ச உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் 27 ஆண்டு கால அரசியல் பயணத்தை முன்னிட்டு, நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பஸில் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

"ஜனாதிபதி அவர்களே, அச்சம் காரணமாகவோ அல்லது கடன் காரணமாகவோ நாம் உங்களுக்கு ஆதரவு வழங்கவில்லை. எமக்கு அச்சமும் இல்லை, கடனும் இல்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம். எமது கட்சியின் தவிசாளர் எம்மை விட்டுச் சென்றபோதும், அந்தச் சூழ்நிலையில் நாட்டைப் பாதுகாக்கக்கூடிய ஆளுமை உங்களுக்கு இருக்கின்றது என்ற அடிப்படையிலேயே ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்தோம்.

நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன்கருதியே அந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, நாட்டையும், மக்களையும் பாதுகாக்கும் வரை கட்சி என்ற அடிப்படையில் உங்களுக்கு (ஜனாதிபதிக்கு) முழு ஆதரவையும் வழங்குவோம். அதனை உறுதிப்படுத்துகின்றேன்" - என்றார். (அ-44-66)

## அரச...

நாளையும் சுகவீனப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

இதனால் இன்றும், நாளையும் நாட்டில் உள்ள சகல அரச திணைக்களங்களின் பணிகளும் முற்றாக முடங்கவுள்ளன. தபால் திணைக்கள ஊழியர்களும் இந்த சுகவீனப் போராட்டத்தில் இணையவுள்ளதால், இருநாள்களும் தபால் விநியோகப் பணிகளும் பாதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களும் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன. (அ)

## மொட்டுடன்...

"நானும், மஹிந்தவும் இரு அணிகளில் இருந்தோம். ஒன்றாக இணையவில்லை. எல்லா இடங்களிலும் எதிர்ப்பு அரசியலிலேயே ஈடுபட்டோம்.

மஹிந்த ராஜபக்ச பதவி விலகிய பின்னர், பிரதமர் பதவியை சஜித் பிரமேதாஸ பொறுப்பேற்கவில்லை. அநுரகுமார திஸநாயக்கவும் காணாமற்போய்விட்டார்.

நாடு விழும் சமயங்களில் இணைந்து செயற்பட வேண்டிய பொறுப்பு பிரதான கட்சிகளுக்கு உள்ளது. அரசியலில் நாம் மோதிக்கொண்டிருந்தாலும் ஒரு கட்சி தோல்வி அடைந்தால் மற்றைய கட்சிக்கு ஜனநாயகமுறைப்படி ஆட்சி கையளிக்கப்பட்டுவந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்வின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எனக்கு ஆதரவு வழங்கியது. மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெறாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? டொலர் 450 ரூபாவையும் தாண்டியிருக்கும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஒத்துழைப்பு இன்றி என்னால் தனித்து இதனைச் செய்திருக்க முடியாது. நான் மொட்டுக் கட்சியில் இணையப்போவதில்லை. ஆனால் நெருக்கடியான நேரங்களில் ஒன்றிணைந்து செயற்படுவேன்" - என்றார். (அ-ச-44)

## சீனக்...


பண்ணைகளை நடத்த அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோதே சம்பந்தப்பட்ட திணைக்களப் பொறுப்பதிகாரிகள் இந்த விடயத்தைத் தெரிவித்தனர்.

"யாழ். மாவட்டத்தில் 369 கடலட்டைப் பண்ணைகள் தற்சமயம் காணப்படுகின்றன. குறித்த கடலட்டைப் பண்ணைகளுக்கு மேலாக 361 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன .

இவற்றுள் 17 பண்ணைகள் ஆய்வுக்குட்பட்டுள்ளன. சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழே குறித்த கடலட்டைப் பண்ணைகள் காணப்படுகின்றன.

கடலட்டை உற்பத்திக்கென உரிமம் பெற்று அரியாலையில் சீன நாட்டவர்களால் இயக்கப்பட்டு வந்த கடலட்டை உற்பத்தி நிறுவனத்தின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டு அந்தக் கட்டட வளாகம் இடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது யாழ். மாவட்டத்தில் எந்த ஒரு சீனர்களும் கடலட்டை சார் தொழிலில் ஈடுபடவில்லை. வெளிமாவட்டம் சார்ந்த பண்ணையாளருக்கும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை" என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச -125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருட்டுக்களைக் கட்டுப்படுத்த விசேட கலந்துரையாடல்

வவுனியா, ஜூலை 8

ஓமந்தை அரச ஊழியர்கள் வீட்டுத் திட்டத்தில், அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் தொடர் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட கலந்துரையாடல், கடந்த புதன்கிழமை ஒன்று இடம்பெற்றது. கிராமஅபிவிருத்திச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.தியாகலிங்கம், செயலாளர் சு.வரதகுமார், ஓமந்தை சுகாதாரப் பரிசோதகர், ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)

# தன்னம்பிக்கையோடு மீளத் தழைப்போம்

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 8

சிங்களதேசம் ஒருபோதும் யாசகம் கேட்டுச் செல்லாது. தன்னம்பிக்கையால் முன்னேறக்கூடிய தேசமாகவே திகழும். ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் - இவ்வாறு காலிமுகத்திடலில் இடம்பெற்ற வங்கியாளர் மாநாட்டில் உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் புதிய அரசியல் மற்றும் பொருளாதார முறைமையொன்று உருவாகவேண்டும். அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அச்சமின்றி உண்மையைப் பேசக்கூடிய தலைவர்கள் அரசியல் கட்டமைப்பில் உருவாகவேண்டும். நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்குத் தகுந்த வேலைத் திட்டத்தை முன்வைத்துள்ளோம். கனவுலகில் இருப்பதை விடுத்து நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டத்தை அடையாளம் கண்டு, செயற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றிச் செல்ல வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது - என்றார். (ச-இ)

# இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது

கொழும்பு, ஜூலை 8

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் விசாரணை ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பொலிஸ் பரிசோதகர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச-இ)

# வாக்காளர் தொகை இந்தாண்டில் உயர்வு

கொழும்பு, ஜூலை 8

கடந்த 2019ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கையைவிடவும் இந்த ஆண்டில் பத்து இலட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர் என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீத் நாயக்க தெரிவிக்கையில்:

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒருகோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படும்.

வாக்காளர் பட்டியல் இந்த மாதம் முதலாம் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 8

கோண்டாவில்கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து, தற்போதைய கல்வியாண்டின் அடிப்படையில் தரம்-4 முதல் தரம்-11 வரையுள்ள பாடசாலை மாணவர்களிடையே சைவ சமய அறிவுப் பரீட்சையை நடத்தவுள்ளது.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தரம்-4 முதல் தரம்-7 வரையான மாணவர்களுக்கும், காலை 9.30 மணிக்கு தரம்-8 முதல் தரம்-11 வரையுள்ள மாணவர்களுக்கும் பரீட்சைகள் ஆரம்பமாகும். போட்டியில் பங்குபெறுவதற்கான விண்ணப்பங்களைப்பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்குமாறும்,

மேலதிக விவரங்களுக்கு 0778997115 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் போட்டியின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ப-66)

# டெங்கை கண்டறிய வடக்கில் 'ட்ரோன்'

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடக்கு மாகாணத்தில் டெங்குப் பரவல் அதிகரித்துக் காணப்படும் இடங்களை 'ட்ரோன்' உதவியுடன் அடையாளம் காணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் விமானப் படையினருடன் இணைந்து 'ட்ரோன்' உதவியுடன் முன்னெடுக்கவுள்ளனர். (அ-ச-66)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் ஏற்பாட்டில், புத்தளம் சேனைக்குடியிருப்பு - மணற்குன்று கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவசக் கண் மருத்துவப் பரிசோதனைமுகாம் அண்மையில் இடம் பெற்றது. (ப-66)

**காணி விற்பனைக்கு**

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்துத் தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 617 2892

(CS/55622) J-1

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/55581) J-1

**விற்பனைக்கு உண்டு**

பாவித்த நல்ல நிலையில் உள்ள Glass door, Tempered glass, Normal glass, Boxbar, மாபிள்சிங், Cladding Board மற்றும் Gypsum Ceiling என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 959 2628

**தேவை**

RAM MEDICAL என்னும் நிறுவனத்துக்கு CLERK வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. விரும்பியவர்கள் 154E, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பிவையுங்கள்.

(CS/55623 A) J-1

**வேலையாட்கள் தேவை**

RELIANCE DISTRIBUTORS என்னும் நிறுவனத்துக்கு விநியோக பையன்கள் DELEVERY BOYS தேவை. விரும்பியவர்கள் சுயவிபரக் கோவையை No: 37, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

(CS/55623 ) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org